# காலாண்டுத் தேர்வு - 2024

8- ஆம் வகுப்பு

பதிவு எண்

## தமிழ்

காலம் : 2.30 மணி

மதிப்பெண்கள் : 100

குறிப்புகள் : 1. மாணவர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.

2. விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.

3. தேர்வெழுத நீலம் மற்றும் கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

பகுதி - 1

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **15 X 1 = 15**

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ........

அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு

2. என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் .........இன்றி வாழ்ந்தார்.

அ) சேம்பல் ஆ) அகம்பாவம் இ) வருத்தம் ஈ) வெகுளி

3. எட்டாம் வேற்றுமை ......... வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) விளி ஈ) பயனிலை

4. சமையலறையில் செலவிடும் நேரம் ............ செலவிடும் நேரமாகும்.

அ) சுவைக்காக ஆ) சிக்கனத்திற்காக இ) உணவுக்காக ஈ) நல்வாழ்வுக்காக

5. காந்தியடிகள் ............. போற்ற வாழ்ந்தார்.

அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்

6. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ...........

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

7. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ..............

அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை

8. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் .............

அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய

9. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ............. மதிக்கின்றனர்.

அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

10. வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

அ) வானம்அறிந்து ஆ) வான்அறிந்த இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த

11. 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால் இ) ஐம்பது + பால் ஈ) ஐ + பால்

unknown student



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 12. | மூன்றாம் வேற்றுமை | - | வினையெச்சம் |
| 13. | இயற்கை ஓவியம் | - | பெரியபுராணம் |
| 14. | நடந்து | - | மண்ணால் குதிரை செய்தான் |
| 15. | இயற்கை அன்பு | - | பத்துப்பாட்டு |

**பகுதி - II**

**பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். (21 - ஆவது வினா கட்டாய வினா)**

16. ***விடைக்கேற்ற வினா அமைக்கவும்.*** **4 X 2 = 8**

அ) பெண்ணின் பெருமை என்னும் நூலை இயற்றியவர் திரு.வி.க.

ஆ) சான்றோர்க்கு அழகாவது நடுவுநிலைமை.

17. உலகம் எவற்றால் ஆனது?

18. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

19. இன்றைய கல்வியின் நிலை பற்றித் திரு.வி.க கூறுவன யாவை?

20. விலை கொடுத்த வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

21. "தன் குற்றம்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** **5 X 2 = 10**

22. ***கலைச்சொல் தருக.***

அ) Talent ஆ) Side Effect

23. ***மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.***

அ) யானை ............... *(பிளிறும்/ முழங்கும்)*

ஆ) பசு ................ *(கத்தும்/ கதறும்)*

24. ***எண்களுக்குரிய தமிழ் எண்ணுருக்களை எழுதுக.***

அ) உலக ஈர நில நாள் பிப்ரவரி 2 ................

ஆ) உலக இயற்கை நாள் அக்டோபர் 3 ............

25. ***உவமைத் தொடருக்கான பொருளை எழுதுக.***

அ) பசு மரத்து ஆணி போல

ஆ) விழலுக்கு இறைத்த நீர் போல

26. ***கோடிட்ட இடத்தை நிரப்புக.***

விலங்கொடு ......... அனையர் ..........

கற்றாரோடு ஏனை யவர்.

27. ***வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.***

அ) நடந்தாள் .............

ஆ) வாழிய ..............



unknown student

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

28. *பாடலின் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.*

*"உடலின் உறுதி உடையவரே*
*உலகில் இன்பம் உடையவராம்;*
*இடமும் பொருளும் நோயாளிக்கு*
*இனிய வாழ்வு தந்திடுமோ?*

மோனை ............... ..................
............... ..................

**பகுதி - III**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 X 3 = 6**

29. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

30. நோய்கள் பெருகக் காரணம் என்ன?

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் திருக்குறள் ஆகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்னும் நான்கு இயல்களைக் கொண்டது. பொருட்பால் அரசியல், அமைச்சியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. இன்பத்துப்பால், களவியல், கற்பியல் என்னும் இரண்டு இயல்களைக் கொண்டது.

அ) உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் எது?

ஆ) இன்பத்துப்பால் எத்தனை இயல்களைக் கொண்டது?

இ) முப்பால் – பிரித்து எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 34 –ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்வும்.** **2 X 3 = 6**

32. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

33. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

34. *அடிபிறழாமல் எழுதுக.*

அ) "வாழ்க நிரந்தரம்" எனத் தொடங்கும் தமிழ் மொழி வாழ்த்துப் பாடல்.

*(அல்லது)*

ஆ) "கற்றோர்க்குக் கல்வி" எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப்பாடல்.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2 X 3 = 6**

35. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?

36. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

37. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?



unknown student



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 X 5 = 25**

38. அ) தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

*(அல்லது)*

ஆ) உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

39. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

40. ***சொற்களை இணைத்து 5 புதிய சொற்களை உருவாக்குக.***

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | தேன் | மலர் | செம்மை | சிட்டு | கனி |
| குருவி | இலை | காய் | கூடு | முட்டை | மரம் |

41. ***கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகைகளைக் கண்டறிந்து எழுதுக.***

அ) இளமையில் கல் ..............

ஆ) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்? ................

இ) கடமையைச் செய் .................

ஈ) பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே ! ...........

உ) கரிகாலன் கல்லணையைக் கட்டினான். ............. .

42. பள்ளியிலும் வீட்டிலும் உன் பொறுப்புகள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3 X 8 = 24**

43. அ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

44. அ) "வெட்டுக்கிளியும் சருகுமானும்" கதையைச் சுருக்கி எழுதுக.

*(அல்லது)*

ஆ) மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

45. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

அ) முன்னுரை - இளமையும், கல்வியும் - விடுதலை வேட்கை - நாட்டுப்பற்று - மொழிப்பற்று - சமூகப்பற்று - இயற்றிய நூல்கள் - முடிவுரை (நான் விரும்பும் கவிஞர்)

*(அல்லது)*

ஆ) முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்தில் உள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை.

****************************

unknown student



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com